**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.61/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : பாபய்யா | மதம் : இந்து |
| த/பெ : சதாசிவம் | ஜாதி : -- |
| வயது : 70 | கிராமம் : ராமாபுரம் |
| தொழில் : விவசாயம் | வட்டம் : திருத்தணி |

**28.08.2025**
**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள கிரி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததில் அது எந்த சொத்து சம்பந்தமானது என்றால் கிரிக்கு நீதிமன்றம் மூலமாக தலையாரி கிராமநிர்வாக அதிகாரி (VAO) நீதிமன்ற அதிகாரி ஆகியோர்கள் வந்தார்கள். டாம் டாம் அடித்து கிரிக்கு நிலத்தை ஒப்படைத்தார்கள். அதில் நீதிமன்ற அதிகாரி சாட்சி கையொப்பம் போட சொன்னார் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். எந்த சொத்து சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்தேன் என்றால் கிரிக்கு நீதிமன்றம் மூலமாக கொடுத்த சொத்தாகும். அது எந்த சொத்து என்றால் பிரதிவாதி சந்திரசேகர் சொத்து ஆகும். டாம் டாம் எந்த இடத்தில் செய்தார்கள் என்றால் சந்திரசேகர் இடத்தில் செய்தார்கள்.

2. அப்போது சந்திரசேகர் இருந்தாரா என்றால் சிறிய தொலைவாக கத்தரிக்காய் மூட்டை வைத்து கொண்டு இருந்தார். சந்திரசேகர் இருந்த விவரம் கிரி, நீதிமன்ற அதிகாரி அங்கிருந்த அனைவருக்கும் தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. அவரை நான் பார்த்தேன். மற்றவர்கள் பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. இவ்வாறு செய்ய கூடாது என சந்திரசேகர் எதுவும் ஆட்சேபணை செய்தாரா என்றால் இல்லை. மேற்படி இடம் மனையிடமா அல்லது விவசாய நிலமா என்றால் விவசாய நிலம் ஆகும். தற்போது அதில் என்ன உள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் பார்த்து எவ்வளவு நான் இருக்கும் என்றால் 2 மாதம் இருக்கும்.

நான் பார்க்கும் போது 2 மாதத்திற்கு முன்பு நான் பார்க்கும் போது அந்த நிலத்தில் என்ன இருந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. எனக்கு தெரிந்து அந்த இடம் தற்போது யார் அனுபவத்தில் இருக்கிறது என்றால் ஞாபகம் இல்லை. அந்த இடம் திருத்தணிக்கு வரும்வழியில் பிரதானசாலையை ஒட்டி உள்ளது என்றால் ஆமாம். தினமும் நான் அந்த வழியாக வருவதால் பார்க்கும் வாய்புள்ளது என்றால் நான் அடிக்கடி வருவேன். நான் பாதையை கவனிப்பேன். சொத்தை கவனிக்கவில்லை. நான் கிரிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நீதிமன்ற அதிகாரி கிராம நிர்வாக அதிகாரி தலையாரி ஆகியோர் சொத்திற்கு அருகிலேயே வரவில்லை என்றாலும் துரத்தில் இருந்துவிட்டு போய்விட்டனர் என்றாலும் இல்லை. சொத்தில் தான் இருந்தார்கள். சொத்திற்கு அருகிலேயே வராததால் தான்சந்திரசேகர் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் அவர் நாங்கள் பார்க்கும் போது கத்தரிக்காய் மூட்டையுடன் சென்றார் அவர் திரும்ப வரவேயில்லை.

**மறுவிசாரணை இல்லை.**